## இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபை - 2024

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 71 ஆம் பந்தியின் பிரகாரம் சபையினால் வழங்கப்பட்டுள்ள ரூபா 8,933,879 ஆன ஊழியர் கடன் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத வகையில் தனித்தனியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடுவதற்குள்ள ஊழியர் கடன் ரூபா 8,933,879 தொடர்பாக 2025 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஊழியர் கடன் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத வகையில் தனித்தனியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 54 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது கிரயம் ரூபா 800,000 தற்காலிக கட்டிடமாக காண்பிக்கப்பட்டிருந்த சொத்தொன்று விற்றுத் தீர்க்கப்பட்டதனால் ஏற்பட்ட நட்டமான ரூபா 425,479 இற்கு பதிலாக அந்த சொத்தின் திரண்ட வருமானத் தேய்வு பெறுமதியான ரூபா 378,520 செயற்பாட்டு நடைவடிக்கை களிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலில் சேர்க்கப்பட்டதன் காரணமாக அந்த காசுப்பாய்ச்சல் ரூபா 46,959 இனால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே அகற்றப்பட்ட சொத்தின் கிரயமான ரூபா 800,000 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டமையால் முதலீடு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்து. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 28 மற்றும் 29 ஆம் பந்திகளுக்கு இணங்க களங்குட்டி அரிசி தயாரிக்கும் கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளின் மேற்பார்வைக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,859,868 தொகையை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சட்டம் மற்றும் ஆலோசனை செலவினத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடைமுறை வேலைப் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் இலாபம் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். களங்குட்டி தொழிற்சாலையின் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,859,868 இனை மூலதன மாக்குவதற்கு 2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மூலதன செலவினங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் சபையினால் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பான கிரய மாதிரி தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் 86 ஆம் பிரிவின் பிரகாரம் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2025 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக ஈடுபடுத்திய மாதிரி கிரயத்திலும் மீள் மதிப்பீட்டிலும் வெளிப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பான படிவத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது அந்த சொத்துக்களுக்கு உரித்தான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண வகுப்பு முழுவதும் மீள் மதிப்பீடு செய்ய வேண்யிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டில் இயந்திரம், உபகரணம் மற்றும் மோட்டார் வாகனங்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது ரூபா 6,556,793 ஆன இயந்திரம், உபகரணங்கள் மற்றும் ரூபா 1,875,000 ஆன 02 டெக்டெர்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். களங்குட்டிய கைத்தொழில் சாலையில் காணப்பட்ட இயந்திரங்கள் யாவும் கழற்றி அகற்றப்பட்டு கட்டிடம் நவீனமயப்படுத்துதல் மற்றும் புதிய கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டமையால் அந்த இயந்திர உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. இரண்டு டெக்டெர்களும் விற்றுத் தீர்ப்பதற்கு தீர்மானித்தமையால் 2025 ஆம் ஆண்டில் அதனை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்கள் உரித்தாகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண வகுப்பு முழுவதும் மீள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 86 (ஈ) பந்தியின் பிரகாரம் காலப்பகுதி ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் சபையினால் ஆண்டின் ஆரம்பத்தில் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்தப் படிவத்தின் பிரகாரம் ஆரம்ப மீதியைக் குறிப்பிட்டு காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காலப் பகுதியின் ஆரம்பத்திலும் இறுதியிலும் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 95 மற்றும் 96 ஆம் பந்திகளுக்கு இணங்க மீளாய்வாண்டில் சபைக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 10,968,500 பெறுமதியான சொத்து வருமானமாக இனங்காணப்படாமல் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டதுடன் நிதியம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போது கிடைத்த 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற நியமத்தின் பிரகாரம் வருமானத்தில் செலவு வைக்கப்படாத ரூபா 3,136,689 பொருள் ரீதியான மானியமாக இனங்கண்டு திரண்ட வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நன்கொடை 2024 ஆம் ஆண்டில் நிதியமொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம். அதனை வருமானமாக இனங்கண்டு 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை வருமானமாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ஊழியர் நலன்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 141(ஆ),(இ), (ஈ), (கா) பந்திகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 141 இன் (ஆ), (இ), (ஈ), (கா) இன் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஊழியர் நலன்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 12,672,300 பெறுமதியான மோட்டார் வாகனம் மற்றும் இயந்திரங்கள் ரூபா 19,945,700 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டமையால் மீள் மதிப்பீட்டு மிகை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் செலவு வைக்கவேண்டியிருந்த போதிலும் அதில் ரூபா 13,153,900 மாத்திரம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் செலவுவைக்கப்பட்டு மிகுதி ரூபா 6,791,800 திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் அப்பெறுமானத்தால் குறைத்தும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். அது 2025 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் செலவு வைக்கவேண்டிய ரூபா 6,791,800 திரண்ட நிதியத்தில் செலவு வைத்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீட்டு மிகை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதான பேரேட்டில் நடைமுறை வேலைப் பெறுமதியான ரூபா 12,960,776 நடை முறைவேலைக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி அப் பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டு முதல் நடைமுறை வேலைக்காக பிரதான பேரேட்டில் கணக்கு ஒன்று திறக்கப்பட்டு நிதிக் கூற்றில் நடைமுறை வேலை, காணி மற்றும் கட்டிடங்களுக்காக தனித்தனியாக காண்பிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறை வேலை சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள ரூபா 691,211 வியாபாரக் கடன்பட்டோர் மீதிக்காக போதியளவான அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். போதியளவான அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்படாதிருந் ததை ஏற்றுக் கொள்கின்றோம். 2024 ஆம் ஆண்டு வரை ரூபா 4,348.41 தொகை ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி ரூபா 686,863 தொகை 2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இழப்பு நட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய அரச சபையின் 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபை சட்டத்தின் 2(1) ஆம் பிரிவு | இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சட்டத்தின் கீழ் இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்து. இந்த சட்டத்தின் கீழ் சபைக்கு அளிக்கப்பட்ட பெயர் இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சபையாக இருந்ததுடன் உணவு மேம்படுத்தல் சபையிலுயினதும் கடிதத் தலைப்பின் கீழ் காண்பித்து சபையின் நடவடிக்கைகள் பேணிச் செல்லப்படுகின்றது. அதன் பிரகாரம் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தினால் அன்றி ஏனைய பெயரில் சபை நடாத்திச் செல்லப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 09/1913/315/042-I என்ற அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் சபையின் பெயர் தேசிய உணவு மேம்படுத்தல் சபையாக திருத்தப்பட்டு அதற்கு நேரொத்த சட்டம் தயாரிப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் தேசிய உணவு மேம்படுத்தல் சபையாக கடித தலைப்பு பயன்படுத்தப்படுவதுடன் இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபை என்ற பெயரும் அதனுடன் பயன்படுத்தப்படுகின்றது. | சட்டம் திருத்தப்பட்டதன் பின்னர் உரிய பெயர் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) மற்றும் 38(2) ஆம் பிரிவுகள் | நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்மானதாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுகின்றமையை உறுதிப்படுத்த வேண்டியிருந்த துடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற் கொள்ளப்பட்ட மீளாய்வினை மேற்கொண்டு பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை யொன்றைத் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப் பாட்டு முறைமை யொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் இலக்கம் 01/2021 மற்றும் 2021 | அரசாங்கத்திற்குரிய பொது முயற்சிகள் செயற்பாடுகள் கைநூலில் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம் நிலையான | 2024 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு தற்போது மேற்கொள்ள ப்படுவதுடன் அது | வருடாந்தம் சொத்துக்கள் தொடர்பாக மெய்மையாய்வு |

| | | | |
|---|---|---|---|
| நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றிக்கை | சொத்துக்கள் மற்றும் களஞ்சியப் பொருட்கள் வருடாந்தம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அந்த மெய்மையாய்வு மேற்கொண்டு காலாவதியான விடயங்கள் அகற்றப்பட வேண்டியிருந்த போதிலும் சபை மீளாய்வாண்டில் சொத்துக்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | பூர்த்திசெய்யப்பட்டவுடன் உங்களுக்கு சமர்ப்பிக் கப்படும். | மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 57,179,787 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 59,970,689 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,790,902 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போக்குவரத்து, தொடர்பாடல், பயன்பாட்டு மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 12,260,225 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வு**

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் திறைசேரி / அமைச்சின் மானியம் 148 சதவீதத்தாலும், ஏனைய செயற்பாட்டு வருமானம் 22 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் வட்டி வருமானம் 47 சதவீதத்தால் குறைவடைந்தமையும், ஊழியர் சம்பள செலவினம், வழங்கல் மற்றும் தேவைப்பாடுகள் செலவினம் முறையே 32 சதவீதத்தாலும் மற்றும் 60 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது. போக்குவரத்து, தொடர்பாடல், பயன்பாட்டு மற்றும் ஏனைய செலவினங்கள் மற்றும் நிலையான சொத்து பழுதுபார்த்தல் பராமரிப்பு செலவினமும் முறையே 66 சதவீதத்தாலும் மற்றும் 10 சதவீத்தாலும் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

கடந்த ஆண்டிற்கு நேரொத்த மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் முறையே 0.31 இனாலும், 0.4 இனாலும் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்டத்தில் காண்பிக்கப்பட்ட நோக்கம் அல்லாத குளத்தில் மண் அகற்றப்பட்டு அதிவேக வீதிகளுக்கு மண் விற்பனையால் 2017-2019 ஆண்டுகளின் போது ரூபா 81,134,631 வருமானம் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பாக செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட மண்ணுக்காக உரிய விவசாய அமைப்புக்களில் இருந்து சபைக்கு நிதி வழங்கப்பட்டு அந்தப் பணம் அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளுடன் ஈடுபடுத்தி சிறிய குளங்களை உரிய நியமத்தில் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியல் | சபையின் சட்டத்தின் பிரகாரம் சபையின் பொது நோக்க இலக்கம் 02 இன் படி சபையின் அதிகாரத்தின் கீழ் இலக்கம் 04 இல் சபையின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் 2017/2018 என்ற ஆண்டுகளின் போது சபையினால் மேற்கொள்ளப் பட்ருந்தது. அதன் மூலம் கிடைத்த பணம் நிலையான | அதிவேக வீதிகளுக்கு மண் விற்பனையால் கிடைத்த வருமானம் திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆலோசனையின் கீழ் அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அவ்வாறு செய்யாமல் பெறப்பட்ட தொகையில் ரூபா 76,085,636 நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | வைப்பொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட அரிசி செறிவூட்டும் செயற்திட்டத்தில் ரூபா 23,973,301 நட்டம் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 18,052,819 ஆன பொது மேந்தலை செலவினம் காரணமாக ஏற்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். அரிசி செறிவூட்டும் செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளும் போது கல்வி அலுவலகம் சுகாதாரப் பிரிவு, விவசாய அமைச்சு மற்றும் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தை உள்ளடக்கிய தரப்பினருக்கு அறிவிப்பதற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத் தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகாக அரிசி பகிர்ந்தளிக்கும் சகல மாவட்டங்களிலும அதிபர், ஊட்டச்சத்து விடயப் பொறுப்பு ஆசிரியர், பிரதேச சுகாதார உத்தியோகத்தரை உள்ளடக்கி இதனை பாடசாலை மட்டத்தில் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதுடன் அவர்களுக்கு உரித்தான வருகை படிகள் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக பங்குபற்றியவர்களுக்காக உபசரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இந்த பணிகளை மேற்கொள்வதற்காக பங்குபற்றுகின்ற சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காகவும் இந்தப் பணம் செலவிடப்பட்டிருந்தது என குறிப்பிடுகின்றோம். | பொது மேந்தலை செலவினங்களைக் குறைக்கும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்தி நடாத்திச் செல்லுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டின் போது இலங்கையில் கால்நடை பண்ணைகளுக்காக சலுகை விலையில் சோளம் மெற்றிக் தொன் | 2024 ஆம் ஆண்டிற்காக சோளம் இறக்குமதி செய்வதற்கு பதிவு செய்த வழங்குநர்களிடமிருந்து கூறுவிலையின் பிரகாரம் | சபைக்கு கிடைத்த அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்து பகிர்ந்தளிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | 25,000 இறக்குமதி செய்வதற்காக திறந்த கேள்வி நடைமுறையின்றி 03 தனியார் நிறுவனங்கள் தெரிவு செய்து பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளும் அந்த நிறுவனங்களுக்கே கையளிக்கப் பட்டிருந்தது. 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் மெற்றிக்தொன் 9,917 உரிய நிறுவனத்தால் இறக்குமதி செய்து சிறிய அளவிலான உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சோளத்தின் சிறிய அளவேனும் உற்பத்தியாளர்களுக்கு சலுகை விலையில் பகிர்ந்தளிக்கப் பட்டமை சபையினால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. 1 கிலோ கிராமிற்கு ரூபா 3 நிருவாக கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டதுடன் மேலும் சபைக்கு கிடைக்க வேண்டிய நிருவாகக் கட்டணம் ரூபா 9,739,370 ஆகக் காணப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த விலையான ரூபா 137 இன் கீழ் வழங்குநர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அந்த கூறுவிலையின் கீழ் இறக்குமதி செய்வதற்காக இணங்கப்பட்ட மேலும் இரண்டு வழங்குநர்களும் தொழில்நுட்ப குழுவினதும் பெறுகைக் குழுவினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இறக்குமதி செய்வற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சோளம் இறக்குமதி செய்யும் செயற்திட்டம் அரசாங்கத்தின் நிதியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயற்திட்டம் அல்லாதிருந்ததுடன் தெரிவு செய்யப்படுகின்ற வழங்குநரால் அவர்களின் பணம் செலவிடப்பட்டு சபைக்காக இறக்குமதி செய்து உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அறவிடுவதற்குள்ள சகல பணமும் அறவிடப்பட்டுள்ளது. | நடவடிக்கைகளை முறையான பிரகாரம் மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்கு உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து சோயா அவரை மெற்றிக்தொன் 5,000 கொள்வனவு செய்து திரிபோஷா கம்பனிக்கு விற்பனை செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்தக் கொள்வனவுப் பணிகளை இணைக்கும் பணிப்பாளர் சபை அங்கத்தவரினால் மேற் கொள்ளப்பட்டிருந்தது. அந்தப் பணிகள் உரியவாறு நிறைவேற்றாமையின் காரணமாக சோயா அவரை கிலோ கிராம் 14,766.1 தொலைந்துபோய் இருந்தமை இனங்காணப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் சபைக்கு ஏற்பட்ட ரூபா 3,013,532 நட்டம் உரிய உத்தியோகத்தரிடமிருந்து இது வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சோயா அவரை இருப்பு தொலைந்து போனமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு 2024.08.20 ஆந் திகதி சோயா அவரை இருப்பின் பெறுமதியான ரூபா 3,013,532 தொகை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டதுடன் மேலும் 2024.10.22 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு இதனை அறவிடுதல் தொடர்பாக மீண்டும் நீதிமன்ற நடவடிக்கைகள் ஊடாக பணத்தை அறவிட முடியுமா என விசாரணை செய்யப்பட்டிருந்தது. | நட்டம் உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட மூன்று செயற்திட்டங் | தற்போது அமுல்படுத்தப்படாத செயற்திட்டத்தின் கீழ் பாரம்பரிய அரிசி செயற்திட்டத்தில் காணப்பட்ட குருளுதுட நெல் | காலாவதியாவதற்கு முன் விற்பனை செய்வதற்கோ அல்லது செயற்திட்டத்திற்காக |

| | | |
|---|---|---|
| களுக்குரிய ரூபா 1,228,361 பெறுமதியான அரிசி மற்றும் குடிபான உற்பத்தி இருப்பில் காலாவதியாவதற்கு முன்னர் விற்பனை செய்வதற்கோ அல்லது ஏனைய செயற்திட்டங்களுக்காக பயன்படுத்துவதற்கோ இந்த அறிக்கைத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கிரோகிராம் 527 ஆகும். அதனை விற்பனை செய்வற்காக தயார்படுத்தல் பதவியணியின் கவனமின்மையின் காரணமாக தாமதமடைந்திருந்ததுடன் தற்போது இந்த இதனை அரிசியாக மாற்றி தெஹிவளை விற்பனைச் சாலையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. ஏனைய செயற்திட்டங்களில் வெற்று உறைகளே காணப்படுவதுடன் அவற்றை பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய இருப்பை பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மீளாய்வாண்டில் போது அமுல்படுத்தப்பட்ட 09 செயற்திட்டங்களில் 08 இற்காக ரூபா 29,067,786 தேறிய நட்டம் பெறப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் நட்டம் 219 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் இது தொடர்பாக உயர் முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப் பட்டது. | 2024 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் சோளம் இறக்குமதி செயற்திட்டம் மாத்திரம் இலாபகரமாக இருந்ததை ஏற்றுக் கொள்கின்றோம். 2025 ஆம் ஆண்டில் நட்டத்தைக் குறைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. | கிரய நலன்கள் தொடர்பாக கவனத்திற் கொண்டு செயற் திட்டங்கள் அமுல்படுத் தப்படல் வேண்டும். |
| (ஆ) | மனித பயன்பாட்டிற்காக உழுந்து (Black Gram) மெற்றிக்தொன் 1,000 இறக்குமதி செய்வதற்கு ரூபா 878.15 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு அதில் 1 கிலோ கிராமிற்கு ரூபா 16 வீதம் ரூபா 16 மில்லியன் தேறிய வருமானம் எதிர்பார்க்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போதும் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டி ருக்கவில்லை. | உழுந்து இறக்குமதி கோட்டா வழங்குவதாக விவசாய அமைச்சின் மூலம் அறிவிக்கப்பட்டமையால் 2024 ஆம் ஆண்டிற்காக உழுந்து இறக்குமதி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் எமது சபைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட பிரகாரம் கோட்டா வழங்காமையினால் இந்த செயற்திட்டத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அவற்றை அமுல்படுத்து தல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 30 வருட வாடகை காலத்திற்காக விவசாய நடவடிக்கைகளுக்காக சபைக்கு கிடைத்திருந்த 10 ஏக்கர் அளவிலான புத்தளையில் அமைந்துள்ள காணி எந்தவொரு பணிக்காவும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் | புத்தள பண்ணை சபைக்கு 30 வருட வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தமையால் மிகவும் செயற்திறனாக அதனை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் | விவசாய நடவடிக்கைக ளுக்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட |

| | | |
|---|---|---|
| காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் இரண்டு ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளை உள்ளடக்கி காணியின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 849,582 செலவிடப்பட்டிருந்தது. | துறையின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்வதற்காக விருப்பம் கோரப்பட்டது. அதன் பிரகாரம் புத்தள பண்ணை எதிர்காலத்தில் வருமானம் உழைப்பதற்காக தற்போது தனியார் துறையின் முதலீட்டாளர்கள் இருவரின் விருப்பத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டு சோளப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | காணியை ஆக்கபூர்வமான செயற் திட்டங்களுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |